செ.வெ.எண்: 46 நாள்:22.10.2020

# பத்திரிக்கைச் செய்தி

கரூர் மாவட்டத்தில், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் 2020-21ன் கீழ் 40 சதவீத மானியத்தில் புதிய பண்ணைக்குட்டைகள் அமைத்து குறுகிய காலத்தில் வளரக்கூடிய மரபணு மேம்படுத்தப்பட்ட கிப்ட் திலேப்பியா மீன் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கு, மீன் வளர்ப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. 1.000 ச.மீ புதிய பண்ணைகுட்டைகள் அமைக்க ஆகும் செலவினத் தொகை 40 ஆயிரம் ரூபாயில், 40 சதவீத மானியமாக, ரூ.16 ஆயிரம் ரூபாய், உள்ளீட்டு செலவினத் தொகை 59 ஆயிரம் ரூபாயில், 40 சதவீத மானியமாக 23 ஆயிரத்து 600 ரூபாய் என ஒரு பண்ணைக்குட்டைக்கு, 39 ஆயிரத்து, 600 ரூபாய் வழங்கப்படும்.

கிப்ட் திலேப்பியா மீன்குஞ்சுகள் இருப்பு செய்து வளர்த்தெடுக்க விருப்பமுள்ள விவசாயிகள் கீழ்க்காணும் முகவரியில் இயங்கும் மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தை அலுவலக நாளில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகளுக்கு 40% மானியம் பின்னிலை மானியமாக வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு மீன்வள உதவி இயக்குநர், எண் 4 காயிதே மில்லத் தெரு, காஜாநகர், மன்னார்புரம், திருச்சி-20, தொலைபேசி எண் : 0431 - 2421173 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்**